**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

அசல் வழக்கு எண்.42/2008

நாள்: 18.07.2025.

பெயர்: ஜெயமேரி (வா.சா.1) க/பெ: சந்தனசாமி

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

**<u>16 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை...</u>**

1) இந்த வழக்கை எனது மாமனார் அந்தோணிசாமி சொத்துக்களைப் பொறுத்து பாகம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன். அந்தோணிசாமி வாரிசுகள் யார் என்றால் அவருக்கு 2 மனைவிகள் ஆவார். முதல் மனைவியின் பெயர் பெரியநாயகமேரி. பெரியநாயகமேரிக்கு மூன்று குழந்தைகள் ஆவார்கள். 1) சவரியம்மாள், 2) ஆரோக்கியசாமி, 3) என் கணவர் சந்தனசாமி. 2வது மனைவியின் பெயர் தெரசம்மாள். அவருக்கு 2 குழந்தைகள் ஆவார்கள். 1) விக்டோரியா, 2) அற்புதமேரி. அந்தோணிசாமி எந்த வருடம் இறந்தார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. எனது கணவர் எப்போது இறந்தார் என்றால் சுமார் 20 வருடங்களுக்கு முன்பு இறந்தார். எனது கணவர் இறப்பதற்கு முன்பே எனது மாமனார் அந்தோணிசாமி இறந்துவிட்டார்.

2) நாங்கள் கிறிஸ்துவர்கள் என்றாலும், எனக்கு கிறிஸ்துவ மதப்படி தான் திருமணம் நடந்தது என்றால் சரிதான். எனது மாமனார் கிறிஸ்துவர் என்றால் சரிதான். நான் தற்போதும் கிறிஸ்துவ மதத்தை பின்பற்றுகிறேன் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் எனது மாமனார் அந்தோணிசாமியின் சொத்துக்கள் ஆகும். தாவா சொத்தானது அவரது தனிப்பட்ட சொத்துக்கள் என்றால் அது பூர்வீகமாக கிடைத்த சொத்துக்கள் ஆகும். எனது கணவர் உயிருடன் இருந்த போது பாகம் கேட்டு எனது மாமனார் மீது வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது மாமனார் இறந்த பின்னரும், எனது கணவரோ, 2ம் பிரதிவாதி ஆரோக்கியசாமியோ தாவா சொத்தை பாகம் கேட்டு வழக்கு தொடரவில்லை என்றால் சரிதான். எனது கணவர் உயிருடன் இருந்த காலத்தில் தான் இந்த வழக்கை நான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். என் கணவரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

3) அடைக்கலசாமி யார் என்றால் அந்தோணிசாமியின் தம்பி ஆவார். தாவா தாக்கல் செய்யும் போது அடைக்கலசாமி உயிருடன் இருந்தாரா என்றால் இல்லை. அந்தோணிசாமிக்கு 5 குழந்தைகள் ஆவார்கள். அவர்களுக்குள் பாகம் பிரித்துக்கொண்டார்களா என்றால் இல்லை. தாவா 2, 4, 5 இன சொத்துக்கள் சர்வே எண்கள்.386/2 என்றும், 386/4 என்றும் இருந்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. அடைக்கலசாமி 16ம் பிரதிவாதிக்கு தாத்தா என்றால் எனக்கு தெரியாது. 16ம் பிரதிவாதியை எதன் அடிப்படையில் இவ்வழக்கில் ஒரு தரப்பினராக சேர்த்தேன் என்றால் எனது கொழுந்தனார் இறந்த 2ம் பிரதிவாதி ஆரோக்கியசாமி பாகம் பிரியாத வழக்கு சொத்தை 16ம் பிரதிவாதியின் தத்தாவும், இறந்து போன 6ம் பிரதிவாதி புஷ்பராஜின் தந்தையுமான அடைக்கலசாமிக்கு கிரையம் கொடுத்ததால் சேர்த்தேன்.

4) தாவா 4, 5 இன சொத்துக்களான சர்வே எண்.386/4 தற்போது உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. தாவா 4, 5 இன சொத்துக்களான சர்வே எண்.386/4A, 386/4B என காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. மேற்படி சொத்து உட்பிரிவு செய்வதற்கு முன்பு 10.07.1972ல் 2ம் பிரதிவாதி, 16ம் பிரதிவாதியின் தத்தா அடைக்கலசாமிக்கு சர்வே எண்.386/4ல் 48 செண்ட் சொத்தை கிரையம் கொடுத்து, அந்த கிரையம் ஆண்டிமடம் சார்பதிவகத்தில் ஆவண எண்.1063/1972 என பதிவு செய்யப்பட்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. மேற்படி சொத்தும் மற்றும் இதர சொத்தும் 16ம் பிரதிவாதியின் தந்தையான 6ம் பிரதிவாதி புஷ்பராஜுக்கு மேற்படி சொத்தை அடைக்கலசாமி 28.05.1981ல் தானசெட்டில்மெண்டாக கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. அந்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் ஆண்டிமடம் சார்பதிவகத்தில் ஆவண எண்.1190/1981 ஆக பதிவு செய்யப்பட்டுள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி சொத்தை 16ம் பிரதிவாதி, அவர் சகோதரர் பிரான்சிஸ், தாயார் சலேத்மேரி ஆகியோர்கள் கூட்டாக அனுபவம் செய்து அதனை 16ம் பிரதிவாதியின் மகன் மரிய அருள்ராஜிக்கு 16.07.2020ல் கிரையம் கொடுத்த விபரம் எனக்கு தெரியுமா

என்றால் தெரியாது. மேற்படி கிரைய ஆவணம் ஆண்டிமடம் சார்பதிவக ஆவண எண்.1708/2020 ஆக பதிவு செய்யப்பட்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

5) மரிய அருள்ராஜை இவ்வழக்கில் ஒரு தரப்பினராக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. நாங்கள் மேல்முறையீடு சென்ற போது மேல்முறையீட்டு நீதிமன்றமான அரியலூர் சார்பு நீதிமன்ற A.S.No.70/2016 ல் ஏற்பட்ட உத்தரவுப்படி இந்த வழக்குரையை திருத்தம் செய்தபோது 2ம் பிரதிவாதி ஆரோக்கியசாமி 10.07.1972 ல் 16 ம் பிரதிவாதியின் தாத்தா அடைக்கலசாமிக்கு எழுதிக்கொடுத்த கிரைய பத்திரம் செல்லாது என்று பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரிதான். மேற்படி அடைக்கலசாமியின் 6ம் பிரதிவாதி புஷ்பராஜிக்கு 28.05.1981ல் எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் செல்லாது என்று பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரிதான். மேற்படி பத்திரங்களை செல்லாது என்று பரிகாரம் ஏன் கேட்கவில்லை என்றால் எனக்கு தெரியாது.

6) எனது மாமனார் சொத்தை எனது கொழுந்தனாரான 2ம் பிரதிவாதி கிரையம் கொடுத்தது செல்லாது என்பதால் தான் நான் பாகம் கேட்டு வழக்கு தொடர்ந்தேன் என்றால் சரிதான். மேற்படி கிரையத்தை ரத்து செய்ய நான் பரிகாரம் கேட்கவில்லை என்றால் எனக்கு தெரியாது. மேற்படி கிரையம் எப்போது ஏற்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் வழக்கு தொடர்ந்த பின்பு தான் கிரையம் கொடுத்த விபரம் எனக்கு தெரியும். வழக்கு சொத்திற்கு வில்லங்க சான்று எடுத்து பார்த்தேனா என்றால் இல்லை. மேற்படி எனது கொழுந்தனார் கொடுத்த கிரையம் பற்றிய விபரம் யார் கூறி எனக்கு தெரியும் என்றால் எனது கொழுந்தனாரின் மகளான 12ம் பிரதிவாதி அந்தோணிமேரி கூறி தெரியும். எப்போது கூறினார் என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. எனக்கு சுமார் 50 வருடங்களுக்கு முன்பு திருமணம் ஆனது.

7) நானும், பிரதிவாதிகளும் ஒரே ஊர் தான். தாவா சொத்தும் எங்கள் ஊரில் தான் உள்ளது. பிரதிவாதிகளும், நாங்களும் ஒரே இனம், மதத்தை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். எனக்கு பிரதிவாதிகள் எவ்வாறு சொந்தம் என்றால் எனது

கணவர் சந்தனசாமியை நான் திருமணம் செய்துக்கொண்ட வகையில் சொந்தம். நான் உள்ளூர் என்பதாலும், மேற்படி தாவா சொத்தைப் பொறுத்து ஏற்பட்ட பரிமாற்றங்கள், அவை ஏற்பட்ட காலத்திலேயே தெரியும் என்றாலும், காலம் கடந்து இவ்வழக்கை தாக்கல் செய்திருப்பதால் அதனை மறைத்து வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா 4, 5 இன சொத்துக்கள் 2ம் பிரதிவாதியான இறந்த ஆரோக்கியசாமிக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றாலும், அதனை அவர் எந்த விதத்திலும் பாராதினம் செய்ய முழு உரிமை படைத்தவர் என்றாலும், அதனால் அவர் கொடுத்த மேற்படி கிரையங்கள் செல்லும் என்றாலும் சரியல்ல. 16ம் பிரதிவாதியை வழக்கு தரப்பினராக சேர்த்த பின்பு அவருக்கு எதிராக எவ்வித பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரிதான், நான் எனது பாகத்தை பெரும் பொறுட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எனது வழக்கு காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நானும், எனது மாமனாரும் கிறிஸ்துவ மதத்தை சார்ந்தவர்கள் என்பதால் எனது மாமனார் உயிருடன் இருக்கும்போது அவர் சொத்தை நான் பாகம் கேட்க எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. பொதுவாக கிறிஸ்துவ மதத்தில் பூர்வீக பொதுக் கூட்டுக்குடும்ப சொத்து என்பது கிடையாது என்பதால் எனது வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அதனால் தாவா 16ம் பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்/-திரு. ம.சி. கண்ணதாசன், எம்.எல்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.